**21.07.2026**

MC.No. 15/2018 திருமதி. பிரிசில்லா ஃபிர்ஜித் த/பெ. தயாளன் PW1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)**

19.09.2018 ம் தேதி எதிர்மனுதாரர் தன்னுடன் சேர்ந்து வாழ சொல்லி எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அந்த அறிவிப்பிற்கு நான் சேர்ந்து வாழ தயார் என்றும், நீங்கள் அழைத்து செல்லவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்கிறேன் எனவும், ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் எனது பதில் அறிவிப்பில் சொன்னவாறு எதிர்மனுதாரர் என்னை அழைத்து செல்ல எதிர்மனுதாரர் அவரது உறவினர்கள் நண்பர்களுடன் எனது வீட்டிற்கு வந்தார் என்றாலும், நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது உறவினர்கள் நண்பர்களுடன் எனது வீட்டிற்கு வந்தார் என்றாலும், நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை என்பதால் தான் எதிர்மனுதாரர் மாவட்ட நீதிமன்றத்தில் அவருடன் என்னை சேர்ந்து வாழக்கோரி IDOP No. 24/2019 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் எதிர்மனுதாரர் அவரது உறவினர்கள் நண்பர்களுடன் எனது வீட்டிற்கு வரவில்லை. அவ்வாறு வராமலேயே மேற்சொன்ன வழக்கை தாக்கல் செய்தார். நான் வழக்கிற்காக எதிர்மனுதாரர் அவரது உறவினர்கள் நண்பர்களுடன் எனது வீட்டிற்கு வரவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பதில் அறிவிப்பில் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவித்துவிட்டு அதிலேயே ஜீவனாம்சமும் கேட்டுள்ளதால் எனக்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றால்

சரியல்ல. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.08.2016 அன்று நான் அனுப்பிய அறிவிப்பு குறித்து அசல் மனுவிலும், 2018ம் ஆண்டு நான் அனுப்பிய பதில் அறிவிப்பிலும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. 10.08.2016 அன்று நான் அனுப்பிய அறிவிப்பிற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த அறிவிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்க தேவையில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9, ம.சா.ஆ.10 ஆவணங்களில் உள்ள இடங்கள் கூட்டு பங்கு இடங்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.9, ம.சா.ஆ.10 ஆவணங்களில் உள்ள இடங்களை பொறுத்து திருச்சி முதலாவது சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 172/2014 என்ற வழக்கில் எதிர்மனுதாரருக்கு விரோதமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் விவசாய கூலி வேலை செய்து நாள் ஒன்றுக்கு ரூ. 500/– வருமானம் பெற்று வருகிறார் என்றாலும், நான் மனுவில் சொல்லியுள்ளது போல் எதிர்மனுதாரர் வசதி படைத்தவர் இல்லை என்றாலும் சரியல்ல. கல்லக்குடியில் எனது அப்பாவிற்கு சொந்தமான வீட்டை அரசாங்கம் எப்போது கையகப்படுத்தியது என்றால் சுமார் 6 வருடங்களுக்கு முன்னால் கையகப்படுத்தியது. நான் கல்லக்குடியில் உள்ள எனது அப்பாவின் வீட்டை அரசாங்கம் கையகப்படுத்தியதால் கிடைத்த ரூ. 46,00,000/– பணத்தின் மூலமாகத்தான் திருவெறும்பூர் எழில் நகரில் வீடு வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அந்த வீடு வாங்கியதற்கான விற்பனை பத்திரத்தை பார்த்தால் தான் உண்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்ற பிறகு முதலில் சேர்ந்து வாழ சொல்லி எதிர்மனுதாரர்

தான் அறிவிப்பு கொடுத்தார் என்றாலும், என்னுடன் சேர்ந்து வாழ எதிர்மனுதாரர் தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும், நான் தான் எனது சுய விருப்பத்தின் பேரில் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றாலும், நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றாலும், அதனால் எதிர்மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.21 12:00:19 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி